# கடவுள்
# ஏன் தீமையை அனுமதிக்கிறார்?

உலகத்தில் பஞ்சங்கள், நாசங்கள் ஏன்?

மனிதர்களிடையே யுத்தம், ஏன்?

ஏன் தீமை செயல்படுகிறது?

நோய்கள் மரணம் ஏன்?

ஏன் இந்த அழிவுகள்?



For more articles contact:

98415 40081

www.DivinePlan.in

## மனிதர்களால் யுகங்களாக தேடப்பட்ட பதில்

உலகத்தில் அழிவுகள், நாசங்கள், மனிதர்களிடையே யுத்தம், ஏன்? கடவுள் என்று ஒருவர் இருப்பாரானால், ஏன் இந்த அழிவு? ஏன் தீமை செயல் படுகிறது? நோய்கள் மரணம் ஏன்? கடவுள் அன்பாக இருக்கிறார் எனில் ஏன் மனிதர்கள் வதை பட தீமையில் உழழ அனுமதிக்கிறார்? இக் கேள்விகள் மனிதர்களுக்கு எப்பொழுதுமே புரிபடாத, விடை தெரியாத கேள்விகளாகவே இருந்து வந்திருக்கிறது. பல தத்துவ ஞானிகளுக்கும் குழப்பமான, புரிந்து கொள்ள முடியாத புதிராகவே இருந்து வந்திருக்கிறது.

ஆனால் வியக்கவைக்கும் வகையில் உற்சாகமூட்டும், பகுத்தறிவுக்கு ஏற்ற பதிலை வேத எழுத்துக்கள் கொடுக்கின்றன.

### கடவுள் தீமைக்கு காரணர் அல்ல, தீமையை அவரால் செய்ய முடியாது

தேவன் இயற்கையிலும் மனுஷரிடையேயும் சூழ்ந்திருக்கிற தீமையான காரியங்களை நேரடியாக உண்டுபண்ணாதிருந்தாலும், அத்தீமையை மனுஷருடைய கீழ்படியாமை, பாவத்திற்கான நியாயமான பின்விளைவாக அனுமதித்திருக்கிறார். இருப்பினும், மனிதனின் தீமை விளைவிக்கும் கடுங்கோபத்தையும், மனிதர்களுடைய பாவச்செயல்களையும், தேவனுக்கு எதிரான சாத்தானுடைய பகைமையையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாத உயரிய திட்டத்தை செயல்படுத்த உபயோகபடுத்துகிறார். தேவபிள்ளைகள் அவருடைய வார்த்தையின் வெளிப்பாடாகிய வேதத்தின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக மட்டுமே அதனை அறிகிறார்கள்.

உதாரணமாக தேவ ஆட்டுக் குட்டியானவரை அவமாரியாதை செய்தபோதும், கேலி செய்தபோதும், சிலுவையில் அறையும்போதும் சாத்தானுக்கும் அந்த தீயநோக்கம் கொண்ட யூத குருமார்களுக்கும், பரிசேயர்களுக்கும் மற்றும் இதயமில்லாத ரோம வீரர்களுக்கும் தாம் தேவ திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவுகிறோம் என்பதை எவ்வளவு குறைவாகவே அறிந்திருந்தார்கள்!.

சிலர் எல்லா காரியங்களையும் செய்யக்கூடிய தேவன் சாத்தானுடைய திட்டங்கள் முழுவதுமாக நிறைவேறுமுன்னே அதை தடுக்க ஏற்ற சமயத்தில் தலையிட்டிருக்க முடியாதா? எனக் கேட்கின்றனர். சந்தேகமின்றி முடியும், ஆனால் அப்படியான தலையீடு தேவனுடைய உயரிய நோக்கத்தை நிறைவேறவிடாமல் தடுத்திருக்கும். அவருடைய நோக்கமானது அவருடைய பிரமாணத்தின் தவறற்ற நிலை, அதின் மாண்பு, அதின் நீதியான அதிகாரம் பற்றி வெளிப்படுத்துவதும் மற்றும் அப்பிரமாணத்தை மீறுவதின் மூலம் உண்டாகும் தீமையான பின்விளைவுகளை மனிதர்களுக்கும், தேவதூதர்களுக்கும் மெய்ப்பிப்பதுவே. இது தவிர இயல்பாகவே வேத வாக்கியங்கள் கூறுகிறபடி தேவனாலேயும் சில காரியங்களை செய்ய முடியாது. தேவனால் "எவ்வளவேனும் பொய்யுரைக்க" முடியாது, (எபிரெயர் 6:18), "அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்" (2 தீமோத்தேயு 2:13). அவரால் தவறு (தீமை) செய்யக்கூடாது.

### நமக்கு நித்திய சந்தோஷமான வாழ்வை கொடுக்கவே விரும்புகிறார்

தேவன் மனித இனம் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும், இசைவாகவும் ஜீவிக்க விரும்புகிறார். அவருடைய இந்த விருப்பம் ஒவ்வொருவரும் நீதியின் கோட்பாடுகளையும் அன்பின் கோட்பாடுகளையும் பின்பற்றி செயல்படுத்தும்போதும் மட்டுமே நிறைவேறும் என்பதை அறிந்திருக்கிறார். இல்லையெனில், துன்பம் மற்றும் சந்தோஷமின்மை ஆகிய பின்விளைவுகளையுடைய தீமையே உண்டாகும்.

மனிதன் தன் சிருஷ்டிகருடனும் மற்றும் சக மனிதருடனும் இசைந்து வாழவே தேவன் விரும்பினார். இதற்கு மனிதன் முழுவதுமாக நீதியின் கோட்பாடுகளால் ஊக்குவிக்கப்பட்டால் மட்டுமே தன்னுடைய உண்மையான சந்தோஷத்தை அடைவதற்கும், சக மனிதருடைய சந்தோசத்தில் அக்கறை கொண்ட மனப்பான்மையோடு நிலைத்திருக்கவும் முடியும் என தேவன் அறிந்திருந்தார்.

### மனித இனத்தின் சுயசித்தம் சுயமாக சிந்தித்து செயல்படும் தன்மை.

கோள்களின் அமைப்பு இயந்திரத்துக்குரிய ஒழுங்கோடு நகருகின்றன. உயிரினங்கள் இயல்பான உள்ளார்ந்த உந்துணர்வால் இயக்கப்படுகின்றன; ஆனால் தேவன் மனித இனத்தை சுய சித்தம் உடையவர்களாக இருக்கவும் மற்றும் அவர்கள் "ஆவியோடும் உண்மையோடும்" (யோவான் 4: 24) தம்மை தொழுதுகொள்ள விரும்பினார். தேவன் மனிதனை செயல்முறைத்திட்டம்பண்ணி தவறுகள் செய்யா மனிதனையும் அதன் மூலமாக குறைகளற்ற பூரணமான ஒரு உலகை உண்டாக்கியிருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட மனிதன் ஒரு யந்திர

மனிதனைவிட எந்த விதத்திலும் சிறந்தவனாக இருந்திருக்க மாட்டான். அவனால் சந்தோஷமாக இருக்கவும் முடியாது. ஆதியாகமத்தின் 3வது அதிகாரம் தெய்வாதீனமாக கொடுக்கப்பட்ட மனிதனுடைய சுயாதீனம் மற்றும் அவனுடைய விருப்பத்தேர்வு குறித்து விளக்கும் ஒரு வரலாறு. மனிதன் நீதியை நடப்பித்தால் அவன் நித்தியமாக ஜீவிக்கலாம் என அறிவுறுத்தியிருந்தார். அவன் கீழ்படியவில்லையெனில், "செத்துக்கொண்டே சாவான்". மரணம் என்பது துக்கமும் துன்பமும் கல்லறையோடுகூட உச்சநிலை அடையும் ஒரு செயல்பாடு. இங்கு குறித்துக்கொள்ள வேண்டியது **"பாவத்தின் சம்பளம் மரணம்", நித்திய வேதனை அல்ல. (ஆதியாகமம் 2:17**, சங்கீதம் 146:4).

மனிதன் துன்பம் மற்றும் மரணம் என்றால் என்ன என அறியாதிருந்தான். அவன் கீழ்படியாமற்போனான். இப்போது தேவன், மனிதனுக்கு கட்டுபடுத்தப்பட்ட அளவிலே தீமையோடு கூடிய அனுபவத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார். நாம் "மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையின் அனுபவம் மூலம் அதை அறியும்படிக்கு அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்" என பிரசங்கி 1:13ல் மற்றும் பிரசங்கி 3:10 ல் படிக்கிறோம். (Young's literal translation பார்க்கவும்). மனிதனின் தீமையுடனான நீண்ட தொடர்பின் நோக்கம், அவன் அதினால் ஒரு சில பாடங்களை கற்பதுவே.

## சுதந்திரமாக செயல்படுவதில் உள்ள சிக்கல்

சுயசித்தம் இருப்பதால் மனிதன் தேவனுக்கு எதிராகக்கூட கலகம் செய்யலாம். மனிதன் தன்னுடைய சுதந்திரத்திற்கு முழுமையாக பொறுப்பானவனாகும் முன், அது தன்னை பெரிய அளவில் பாதிக்கும் என தேவன் நன்றாக அறிந்திருந்தபோதிலும், தேவன் சுயாதீனம் கொடுக்கவே விரும்பினார். என்னே ஓர் வியகத்தகுந்த வல்லமை!. மனிதன் வணங்காகழுத்துடையவனாக தன் சிருஷ்டிகருக்கு எதிராக அடங்காமல் நிற்கலாம். அவருடைய அதிகாரத்திற்கு கீழ்படிய மறுக்கலாம். அவன் தேவனுடைய தயவை ஏற்க மறுக்கலாம் மற்றும் சுயாதீனத்தின் மூலமாக மனிதன் மனிதனாக இருக்கிறான். மிருகம் போலவும் இயந்திரம் போலவும் அல்லாமல் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டிருக்கிறான்.

ஒரு தந்தை நெருப்பை தொடக்கூடாது என தன் குழந்தையிடம் அறிவுறுத்தலாம். ஆனால் அனலினால் சுடப்படுவதைக் குறித்து குழந்தைக்கு என்ன தெரியும்?. அறிவுள்ள தந்தை வெப்பத்தின் விளைவை தெரிந்துகொள்ளும் முன் குழந்தையை அடுப்பை தொடுவதிலிருந்து தடுப்பது கூடாத காரியம் என்பதை அறிந்திருக்கிறான். ஆகவே கட்டுபடுத்தப்பட்ட அளவில் சூட்டினை உணரும் அனுபவத்தை உண்டாக்குவான். குழந்தையின் கையை பிடித்து அனல் குறைவாகவுள்ள இடத்தில லேசாகவும் துரிதமாகவும் தொடச்செய்வதன் மூலம் நெருப்பின் ஆபத்தை உணரச்செய்ய முடிகிறது.. மேலும் பிள்ளைகள் சில பாடங்களை கடினமான அனுபவத்தின் மூலமாக மட்டுமே கற்றுக்கொள்வார்கள் என்பதை அறிந்த பெற்றோர்கள் வாழ்நாள் முழுவதும் தங்கள் பிள்ளைகளை எச்சரித்துக்கொண்டேயிருப்பார்கள்.

## அவருடைய திட்டம் என்ன?

இப்போதுள்ள தீமையின் ஆளுகையை தேவன் ஏன் அனுமதித்தார்?, அவர் நம் முற்பிதாக்களை பூரணராகவும் நீதி நேர்மையுடையவராகவும் சிருஷ்டித்த பின்னர் ஏன் சாத்தானை அவர்களை சோதிக்கும்படியாக அனுமதித்தார்?. சாத்தான் தீமை செய்தபோது தேவனால் அவனை அழிக்கமுடியவில்லையா?. ஏன் அவர் தடைசெய்யப்பட்ட மரத்தை நல்ல மரங்களின் நடுவே இடம் பெற அனுமதித்தார்?. இப்படியான கேள்விகளுக்கு பதில் தேடிய பின்னர் கடைசியாக தேவன் மனிதனுடைய வீழ்ச்சிக்கான எல்லா சாத்தியகூறுகளையும் தடுத்திருக்ககூடாதா? என கேள்வி எழும்பும். சந்தேகமின்றி இப்படியான கேள்வி உருவாக தேவனுடைய திட்டத்தை புரிந்துகொள்வதில் உள்ள குறைபாடே காரணம்.

நம்முடைய பிதாவாகிய தேவன், பாவம், கீழ்படியாமை மற்றும் அவைகளின் கொடிய பின்விளைவுகளை பற்றிய எச்சரிப்பை மனிதன் புரிந்துகொள்ளமாட்டான் என்பதை அறிந்திருந்தார்.

ஆகவே தேவன், மனிதன் தன் சுயாதீனத்தின்படி (சுயதெரிந்தெடுப்பின்படி) முதலாவது தீமையை குறித்த அனுபவங்களையும் அதன் பின்னர் நீதியை குறித்த அனுபவங்களை பெறும்படியும் (தேவனுடைய இராஜ்ஜியத்தில்) ஒரு திட்டத்தை முறைபடுத்தினார். இப்படியான மாறுபாடான அனுபவங்கள் தவிர வேறு எந்த விதமான செயல்முறையும் அனுபவமும் தேவனுடைய பிரமாணத்தின் அழகையும் நீதியையும் அதை மீறுவதின் மூலமாக வருகிற கொடிய பின்விளைவுகளையும் மெய்பித்து காண்பிக்க பயன்படாது.

## நமது சிருஷ்டிகரின் உன்னத திட்டம்

அவரால் தவறு (தீமை) செய்ய முடியாது. ஆனால் சில சமயங்களில் நமது கிட்டப்பார்வையானது இத்தகைய எல்லையற்ற ஞான ஊற்றை குறித்து தெளிவாக தெரிந்துகொள்ள முடியாதிருப்பினும், தேவன் தமது சிருஷ்டிகளை

# அன்பின் தேவன் ஏன் தீமையை அனுமதிக்கிறார்?

உயிர் கொடுத்து உலகில் அறிமுகப்படுத்துவதற்கு **ஞானமான மிகச் சிறந்தொரு** திட்டத்தையே அல்லாமல் வேறெதையும் தெரிந்தெடுக்கமாட்டார்.

நன்மைகள் நிறைந்த தமது திட்டங்களை செயல்படுத்துவதில் சில காலத்திற்கு தீமையையும் தீமை செய்பவரையும் பங்கு பெற அவர் அனுமதிக்கிறார்.

இருப்பினும் இது தீமையின் நலனுக்காகவோ அல்லது அவர் பாவத்தோடு ஒத்து இணைவாக இருக்கிறார் என்பதற்காகவோ அல்ல. ஏனெனில் அவர் "துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல" என அறிவிக்கிறார் (சங்கீதம் 5:4). தீமையை எல்லா கருத்திலும் எதிர்த்தாலும் தேவனுடைய ஞானமானது தமது சிருஷ்டிகளுக்கு தீமையைக் குறித்த நிரந்திரமான அருமையான பாடமாக அமையும் ஒரு வழியாக பார்த்தபடியால் தேவன், தீமையை சில காலத்திற்கு அனுமதிக்கிறார். (அதாவது அதை தடுப்பதில்லை).

இதைக் குறித்து பலரும் சரிவர அறியாதிருந்தாலும், தேவனுடைய ஆழங்களை அறியும்படிக்கு "பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு அருளப்பட்ட" மெய்யார்வம் மிக்க எல்லாருக்கும் இவைகள் வெளியரங்கமாயும் தெளிவாகவும் உள்ளது (மத்தேயு 13:11, 1 கொரிந்தியர் 2:10). இவர்கள் இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய சாத்தானின் மேற்பார்வையில், தீமையின் ஆளுகையும், பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையும் இரு காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்துகொள்கிறார்கள்.

1. எல்லா மனிதரும் பாவத்தின் அதீதமான பாவமுடைமையையும் அதின் நியாயமான பலனாகிய கசப்பான அனுபவங்களையும் முழுவதுமாக அனுபவிக்கவும்,
2. தேவ பிள்ளைகள் தங்களின் தேவனுக்கான உண்மைத்துவம் குறித்து சோதனை மற்றும் வேதனையின் நிழலிலும், நலம் மற்றும் வளமிக்க வாழ்வின் வெளிச்சத்திலும் முழுமையாக சோதிக்கப்படவும், அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**மனித இனத்திற்கு மகத்தான பாடம்**

தற்கால அனுபவங்கள் "பாவத்தின் சம்பளம் மரணம்", "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்", "துரோகிகளின் வழியோ கரடுமுரடானது" என்கிற பாடத்தை போதிக்கின்றன. பூரணமும் சுத்தமுமான சிருஷ்டிகள் மட்டுமே நிரந்திரமாக வாழ தகுதியுடையதாக மதிக்கப்படும் எனபது சிருஷ்டிகரின் தெளிவான அறிவிப்பாகயிருக்கிறது.

எனவே பாவத்தின் அதீத பாவமுடைமை குறித்து நிருபித்துக் காட்டப்படுகிறது. இவ்வாழ்க்கையில் சிலர் இப்பாடத்தின் மூலமாக இலாபமடைகிறார்கள் மற்றும் இவ்வாறானவர்களே முதன்மையாக பரலோக அழைப்பிற்கு அழைக்கப்பட்டார்கள். மனித இனத்தின் பெரும்பான்மையோர் பாவம், தீமை குறித்து மட்டுமே கற்கிறார்கள். தேவனால் முன்னேற்பாடு செய்யப்பட்ட மனித இனத்திற்கான எதிர்கால நீதியுடனான அனுபவங்கள் பெரும்பான்மையோரின் பார்வைக்கு புலப்படவில்லை. "கிறிஸ்துவின் மகிமையான சுவிஷேசத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான் (2 கொரிந்தியர் 4:4).

இருப்பினும் மேசியாவின் இராஜ்ஜியதில் புதிய யுகத்தினுள் செல்லும்போது மகிமையான தேவனுடைய குணசீலம் குறித்த அறிவின் உண்மையான ஒளி எல்லா இடங்களிலும் வீசும் "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" (ஏசாயா 35:4-10). தேவ அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடான, மேசியாவின் கிருபை நிறைந்த பூமிக்குரிய ஆட்சியின் நோக்கம் பெரும்பான்மையான நம்முடைய வீழ்ந்துபோன இனத்தை, ஏழ்மையானோரை உயர்த்துவதே ஆகும். மேசியாவின் ஆயிரவருட ஆட்சியிலே, மரித்தவர்கள் உயிரோடு எழும்பி இப்பூமியில் ஜீவிக்க வருவார்கள். இதன்மூலமாக, இப்பூமியில் அனைவருக்கும், இப்போதுபோல நீதியின் விரும்பத்தக்க தன்மை குறித்து அறிந்துகொள்ள முழுவதுமான வாய்ப்பு கொடுக்கப்படும்.



பாவத்தின் விரும்பத்தகாத தன்மை குறித்து ஏற்கனவே (இப்போதே) அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே எதிர்மறையான அனுபவங்கள் மூலம் அவர்கள் நன்மை மற்றும் தீமையின் உண்மைத்தன்மையையும் அவைகளின் பலன் குறித்தும் அறிந்து கொள்வார்கள். ஆயிரவருட ஆட்சியின் முடிவில் (கிறிஸ்துவின் இராஜ்ஜியம்) என்னே வியக்கத்தகுந்த பாடங்களை, நன்மை மற்றும் தீமை குறித்து கற்றிருப்பார்கள்!. பின்னர் அவர்களுக்கான தேர்வு (சோதனை) வரும் (வெளிப்படுத்தின விஷேசம் 20:7-9).

நன்மை தீமை குறித்து முழுவதுமான அறிவை (அனுபவத்தை) பெற்றபின் அவர்கள் எதை தெரிந்தெடுப்பர்?. நன்மையையும் மற்றும் அதின் பரிசாகிய நித்திய ஜீவனையே தெரிந்தெடுக்க தேவன் அனைவரிடமும் வருந்தி உந்துகிறார் (விரும்புகிறார்). இருப்பினும், அவர் வற்புறுத்தமாட்டார். ஒவ்வொரு தனி நபரையும் தேவ ஒழுங்குகளுக்கு இசைவாகவோ அல்லது எதிராகவோ, தன் சுயமாக தெரிந்தெடுக்க, தன் வழியைத் தானே உருவாக்கிக்கொள்ள விட்டுவிடுவார். இருப்பினும், நீதியின்மேல் பிரதானமாக அன்பு செலுத்துகிற, தீமையை வெறுக்கிற நிலையிலிருப்பவர்கள் மட்டுமே, பூமிக்குரிய இராஜ்ஜியத்தில் பங்குபெற தகுதியுள்ளவர்களாக கருதப்படுவர்.

இப்படியான எதிர்மறையான அனுபவம் அன்பு மற்றும் நீதியை நடப்பித்தலுக்கும், தீமை மற்றும் பாவத்தை தவிர்ப்பதற்கும் வழி நடத்தும். இம்முறையில் நித்திய ஜீவனுக்கு தகுதிபடுத்துவதை தவிர, நாம் எண்ணிப்பார்க்கும் வேறு எந்த முறையும் பெரும்பான்மையானோரை தகுதிப்படுத்தாது. ஏனெனில் அனுபவமே மிகச் சிறந்த ஆசான் (ஆசிரியர்) (ரோமர் 11:30-32, சங்கீதம் 90:14-17).

## மரண தண்டனை படிப்படியாக அனுபவிக்க செய்தல்

ஜீவியத்தின் கிருபைகளை மனிதன் வசதியோடுகூட அனுபவிக்கும் பொருட்டும் மற்றும் அவனை சோதிக்கும்படி சரியான இடமாக அமையும் பொருட்டும் மட்டுமே தேவன் முன்னதாக வியக்கும் விதமாக ஏதேன் தோட்டத்தை ஆயத்தம்பண்ணினார் (ஆதியாகமம் 2:8) என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவன் மனிதனின் வீழ்ச்சியை முன்பாக அறிந்து பாவத்தின் தண்டனையை உடனடியாக செயல்படுத்தாமல், “செத்துக்கொண்டே சாவாய்” (ஆதியாகமம் 2:17, மார்ஜின் காண்க) என படிப்படியாகவே அனுபவிக்க செய்தார். சாதகமில்லாத சீதோஷ்ணநிலை, முட்கள், களைகள், நிலத்தின் தரிசலான தன்மை, புயல் (சூறாவளி), வெள்ளம் மற்றும் நிலநடுக்கம் போன்றவைகள் கொண்ட பண்படாத பூமியின் சாதகமில்லாத நிலையை எதிர்த்து போராடுவதின் மூலமாக படிப்படியாக மரணதண்டனை செயல்படுத்த வேண்டியதாகிறது. பண்படாத பூமி, பூரணமான கீழ்படிதலுள்ள தேவனுடைய பிள்ளைகளாகிய மனிதர்கள் வாழும் வகையில் சீர்படுத்தி பண்படுத்தப்பட 7000 வருடங்கள் ஆகும்.

வேதவாக்கியங்களின்படி தண்டனையானது: “நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கு திரும்புவாய்”, “செத்துக்கொண்டே சாவாய்” என்பதே. (ஆதியாகமம் 3:19, 2:17, Literally “dying you shall die””).

அந்த ஸ்திரியின் வித்து, எவ்விதத்திலும் ஏதோ ஒரு காலத்தில் மீட்பை உண்டாக்கும் (ஆதியாகமம் 3:15) என தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார் என்பது உண்மையே. எனினும் அது துல்லியமல்லாத மற்றும் தெளிவற்றதான மங்கலான நம்பிக்கையையே கொடுத்தது. கட்டளை விதிமுறைக்கும், நீதிக்கும், இசைவாக, தேவன் அவர்களோடு கடினமாக இடைபட்டிருந்தாலும், அவர்களிடம் பரிவும் இரக்கமும் கொண்டிருந்ததுமட்டுமல்லாமல் கடைசியாக நீதி தவறாமல் அல்லது தனது நியாயமான மரண தண்டனையை புறக்கணியாமல் துன்பம் துடைப்பார் என்பதை அப்போதைய வாக்குத்தத்தம் தெளிவாக தெரிவிக்கவில்லை.

## நித்திய வேதனை (நரகம்) – நீதியில்லாதது, அன்பில்லாதது

ஒரு சிலர் நம்புவதும் போதிப்பதும் போல, தேவனுடைய தீர்ப்பானது தம்முடைய சிருஷ்டிகளை நித்திய வேதனை மற்றும் கடுந்துயர்பட தண்டித்தது என்றால் அப்படியான தீர்ப்பை ஆதரித்து யாரால் வழக்காடக்கூடும்?. இல்லையெனில் அப்படியான நியாயாதிபதியை நீதியானவர் அல்லது அன்புள்ளவர் அல்லது எவ்விதத்திலும் நல்லவர் என எப்படி கூற முடியும்?. முழுமையான அறிவுடைய யாராலும் கூற இயலாது. ஆனால் வேத எழுத்துக்கள் மூலமாக **மரணம் என்பது ஜீவன் அற்றுபோதல் (ரோமர் 6:23, ஏசாயா** 43:17) என்றும் நித்திய வேதனை அல்ல என்றும் அறிகிறோம்.

## கிறிஸ்தவர்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்

உலகமக்களுக்கு பொதுவான வாழ்க்கையின் துன்பங்களிலிருந்து ஏன் தேவனுடைய ஜனங்கள் விலக்கப்படவில்லை என்பதற்கு இருவேறு காரணங்கள் உள்ளன.

1. அப்படியான துன்பங்களிலிருந்து கிடைக்கும்விலக்கு, சுயநல நோக்கிலிருந்து எல்லாவிதமான குணக்கேட்டையும் சபைக்குள் கொண்டு வரும். தேவன் அவருடைய ஆசிர்வாதங்களை எல்லோருக்கும் ஏற்ற சமயத்தில் கொடுக்க கருத்தில் கொண்டிருந்தாலும், அதை ஒரு செயல்திட்டத்தின்படியே செய்கிறார். அத்திட்டத்தில் சுவிஷேசயுகத்தை ஒரு விஷேச வகுப்பினரை, ஒரு விஷேச காரணத்திற்காக, தேவ முகவராக (Divine Agent) உபயோகிக்க, வரும் யுகத்தில் உலகம் முழுவதையும் ஆசீர்வதிப்பதிலும் மற்றும் மூடநம்பிகையிலிருந்து விடுவிப்பதிலும் ஆண்டவரும் இரட்சகருமானவருடன் சுதந்திரவாளியாக இருக்க, தனியே ஒதுக்கியிருக்கிறார். ஆகவே பொதுவான புரிந்து கொள்ளுதலின்படி அல்லாமல் மாறாக, தேவன் தம்முடைய சபையில் ஒரு சிலரை சேர்ப்பது போலவே ஒரு சிலரை தவிர்க்கவும் கவனமுள்ளவராக இருக்கிறார். அவருடைய விருப்பத்தேர்வு நிறம், பாலினம், கல்வி மற்றும் நாடு முன்னிட்டு வெளிப்படுத்தபடவில்லை. ஆனால் விசுவாசம், கீழ்படிதல் மற்றும் இருதயத்தில் அல்லது சித்தத்தில் உள்ள கிறிஸ்துவின் சாயலை (Christ Likeness) முன்னிட்டே வெளிப்படுத்தபடுகிறது. தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் (மகிமைபடுத்தப்பட்ட சபையின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைவரும், இராஜரீக ஆசாரிய வகுப்பினர்) தமது குமாரனுடைய சாயலுக்கு (கிறிஸ்துவின் சாயல்) ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார் (ரோமர் 8:29)

2. அத்துன்பங்கள் தேவனை இயல்பாகவே நம்புவதற்கு (படிக்கும்படிக்கு) தேவப்பிள்ளைகளின் அத்தியாவசிய பயிற்சியின் ஒரு பகுதி. அவர்களின் பாடங்களின் ஒன்றாக (மற்றும் எல்லாவற்றில்லும் முக்கியமானதும் கூட) இதை படிக்க முடியாதவர்கள் பரீட்சையில் தேற முடியாது. அதனால் அவருடைய பரலோக இராஜ்ஜியதிலோ அல்லது பூமிக்குரிய இராஜ்ஜியதிலோ இயேசுவோடுகூட ஆள தகுதியில்லாதவர்களாக கருதப்படுவர். விசுவாசம் மட்டுமே இராஜ்ஜியதில் பங்குபெற ஒரே தகுதி என்றில்லை என்பது உண்மையே. ஆனால் அது எல்லாத்தகுதிகளையும் விட மிக முக்கியமானது. ஏனெனில் விசுவாசமில்லாமல் மற்ற குணக்கிருபைகளை விருத்தி செய்யமுடியாது. மற்றும் விசுவாசமில்லாமல் நாம் பூரணமாக மற்ற குணக்கிருபைகளை பெற்றிருந்தாலும் அவைகள் "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" (எபிரேயர் 11:6).

உண்மையாய் பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவனின் வாக்குத்தத்தம் என்னவெனில் "அவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" (ரோமர் 8:28). தேவனோடுகூட ஒரு புதிய உறவுமுறைக்குள் வந்தபடியினால் அவைகளுடைய காரியும் எல்லாம் இனி அவருடைய காரியம் மற்றும் அவருடைய அக்கறை என உறுதி கூறுகிறார். இதைத்தொடர்ந்து, உலகம் பல்வேறு விபத்துகளுக்கு உட்பட்டிருந்தாலும் கூட (தற்போதுள்ள சாபத்தின்கீழ் அபூரணத்தன்மையால் நிகழ்வது) தேவனுடைய "சிறியவர்கள்" அவருடைய தனித்தன்மையான பாதுகாப்பில் உள்ளனர் என்பதை முழுவதுமாக அவர்களால் உணரமுடியும். தேவனின் அனுமதி மற்றும் அவர் அறியாமல் அவர்களுடைய தலையின் ஒரு மயிராகிலும் சேதப்படமுடியாது (லூக்கா 12:7, யோவான் 10:28,29). என்னே வியத்தகு காரியம்!. மேலும், "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு (பயபக்தியுடையவர்களுக்கு) இரங்குகிறார் (சங்கீதம் 103:13) என்ற வாக்குத்தத்தத்தை நாம் நினைவுகூறும்போது என்னே பொருத்தமாய் இருக்கிறது.

## பேரழிவுகளை எவ்வாறு கருதுவது

பாவத்தை விட்டு விலகாமலும் மற்றும் இரட்சகரும், ஜீவனைத் தருபவருமானவரை பிடித்துகொள்ளாமலும் இருக்கிற எல்லோருக்கும் வரும் நியாயமான தண்டனையை விளக்க, இயேசு அவர் காலத்தில் பேரிடர்களை பயன்படுத்தியது போலவே நாமும் இப்போது பயன்படுத்துகிறோம். அழிவு, செயல்பாடு அற்ற நிலையான மரணமே பாவத்திற்கான இப்போதைய நியாயமான தண்டனை என வேதம் போதிப்பதை நாங்கள் தெரிவிக்கிறோம். நித்திய வேதனை கொள்கையென சில தேவபிள்ளைகளால் இன்றும் நம்பப்படுகிற காரியத்தை வேதவசனங்கள் கூறவில்லை எனவும், அது தேவனின் குணநலன்களுக்கு விரோதமான சாத்தானின் தூஷணமான அவதூறு எனவும் நாங்கள் அதனை கண்டிக்கிறோம். மேலும், மனம்வருந்துதல், சீர்பொருந்துதல் மற்றும் இரட்சகரில் விசுவாசம் மூலமாக மட்டுமே தேவனின் ஈவு, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நித்திய ஜீவனை பெற முடியும் என உறுதியாக கூறுகிறோம். ஜீவ ஈவு குறித்து கேள்விபடுபவர்கள் ஒவ்வொருவரும், அதனை புரிந்துகொள்ளும் அளவிற்கேற்ப அதற்கு பொறுப்பாளிகளாய் இருக்கிறார்கள்.

## அன்பின் தேவன் ஏன் தீமையை அனுமதிக்கிறார்?

தேவனுடைய வாக்குத்தத்தம் மற்றும் திட்டத்தின்படி, எல்லா மனுக்குலமும், ஒரு குறிப்பிட்ட காலத்தில், இந்த வாய்ப்புகளையும் விதிமுறைகளையும் முழுமையாக தெளிவாக உணர்ந்துகொள்ளவும், சுவிஷேசயுகத்திலோ அல்லது ஆயிரவருடயுகத்திலோ மனந்திருந்தி பின்னர் ஜீவனைப்பெறவும், முழுமையான வாய்ப்போடுகூட உயர்த்தப்படுவார்கள் (யோவான் 1:9, எரேமியா 31:31-34).

பொதுவாகவே மனிதனின் பூரண குறைச்சல் மற்றும் அனுபவ குறைச்சல் நிமித்தமாக நிகழுவதே விபத்துகள் என கருதவேண்டும். அல்லது ஏழாவது ஆயிர வருடத்தில் (ஆயிர வருடயுகம்) அதாவது ஓய்வு நாளில் பூமி தன் அதீத அமைதியான மற்றும் பூரண நிலை அடையவும், ஆயிர வருடயுகத்திற்கு பிற்பாடு எப்போதும் இருக்க வேண்டிய பூமியின் முழுமையான பூரண நிலை அடையவும் பூமியை ஆயுத்தமாக்குவதில் முறையே நிகழும் கொந்தளிப்பு என கருதவேண்டும். அவ்வாயிரவருடயுகத்தில் கிறிஸ்துவின் நேரடி வழிகாட்டுதலின்மூலம் பூமிக்கு இறுதி வேலைப்பாடு செய்யப்பட்டு இரட்சிக்கப்பட்ட இனத்திற்கு பூமி முழுமையாக ஆயுத்தமாக்கப்படும். அவருடைய ஆளுகையானது பூமியை நீதியாய் உபயோகிக்க, துய்த்து மகிழ மற்றும் ஆள ஆயுத்தப்படுத்தும். மனிதன் இத்தகைய பேரிடர்கள் மற்றும் விபத்துகளுக்கு பாதுகாப்பின்றி விட்டிருப்பதும், அவனுடைய சிருஷ்டிகர்த்தர் இன்னல் தடுத்து ஆதரிக்காமல் விட்டிருப்பதற்கும் காரணம்

(1) மனிதன் மரண தண்டனைக்குரிய பாவி, அத்தண்டனை அவனுக்கு விலக்கப்படாமல் அதற்குற்படுத்தப்பட்டு விளைவுகளை அனுபவித்து வெளிவரவேண்டும்.

(2) மரணதண்டனையின் எல்லாவிதமான விளைவுகளான இடர்பாடு, துயரம், வலி ஆகிய அனுபவத்தால் மனுக்குலம் இப்போது ஒரு பாடத்தை கற்கிறது. இந்த அனுபவம் வரப்போகும் **கிறிஸ்துவின் யுகத்தில்** நன்மை தீமையில் சரியானதைத் தெரிந்து கொள்ள மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

முதலாவதாக **தீமை** குறித்த பாடத்தை கற்றுக்கொள்ளும் மனுக்குலத்திற்கு, இரண்டாவதாக இப்போது மங்கலாக தெரியும் **நன்மையும்** அதன் ஆசீர்வாதம் நிறைந்த விளைவுகளும் கிறிஸ்துவின் **ஆயிர வருடயுகத்தில்** தெளிவாக காண்பிக்கப்படும்.

### இக்கட்டு காலம்

இதன் தொடர்பாக, உதாரணத்திற்கு 1914ல் வெடித்த உலகப் போரானது அதின் இருபாகங்களாக மிகவும் பரவலாகவும், வறுமையாக்கியதும், அழிவும் செய்த போர் என வரலாற்றில் அறியப்படுகிறது. இதில் இலட்சக்கணக்கானோர் பயங்கரமாக படுகொலை செய்யப்பட்டனர். தாங்கக்கூடாத வரி பாரத்தினாலும், இன்னொரு போருக்கான ஆயத்தத்திற்கு பெரிய முயற்சிகளாலும் ஏராளமான நாடுகள் கடனாளியாக்கப்பட்டிருக்கிறது, மற்றவைகள் அந்நிலை நோக்கி வேகமாக நெருங்கி கொண்டிருக்கிறது. ஏன் இப்போதைய சந்ததி இது போன்ற பயங்கர அழிவால் துயரத்திற்குள்ளாகிறது? என கேட்கலாம்.

அக்டோபர் 1914 முதல் "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலத்தில்" (தானியேல் 12:1) நாம் ஜீவித்து கொண்டிருக்கிறோம் என நிறைய அடையாளங்களும் தீர்க்கதரிசனங்களும் தெரிவிக்கிறது. இயேசுவும் கூட "இனி மேலும் சம்பவியாததுமான உபத்திரவம்" (மத்தேயு 24:21) எனக் கூறியிருக்கிறார். இந்த யுகத்தின் முடிவில் அநேகர் இங்கும் அங்கும் ஓடுகிறார்கள், அறிவும் பெருகியிருக்கிறது (தானியேல் 12:4), தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாள் (ரோமர் 2:5), யாக்கோபு 5:1-5ல் சொல்லப்பட்டிருக்கிற "கடைசி நாட்கள்" 2 தீமோத்தேயு 3:1-5ல் உள்ள "கொடிய காலங்கள்" போன்ற உலகளாவிய துன்பத்திற்கான காலம் என இனி ஒருகாலமும் ஒருபோதும் (ஒருக்காலும் சம்பவியாததும்) தேவையில்லாதது குறித்து நாம் மகிழ்கிறோம்.

மனிதன் தன் பாவத்தாலும் சுயநலத்தாலும், தனக்கு தானே துன்பம் வருவித்து கொள்கிறான். ஆகவே "அவர் (இயேசு) தன்னை ஆயுத்தம் பண்ணும் நாள்" (வரயிருக்கிற ஆயிரவருட சமாதான ஆளுகைக்காக) (நாகூம் 2:3) குறித்த தீர்க்கதரிசனத்தின்படி, வறட்சி, பஞ்சம், கொள்ளைநோய் முதலியன பெரும்பாலும் மனிதன் தன் சுயநலத்தால் காடுகளை அழிப்பதாலும், நிலத்தின் மண்ணை அழிப்பதாலும், சுயநல வாணிகத்தாலும், இயற்கை உணவுகளின் வீரியத்தை குறைப்பதாலும், போருக்கான ஆயத்தங்களாலும், அணுவெடித்தல் மூலமாக வளி மண்டலத்தை சீர்கெடுப்பதாலும் முதலிய காரியங்களால் தீமை வருவித்து கொள்கிறான். ஆகவே தேவன் தம்முடைய திட்டங்களை நிறைவேற்ற பெரும்பாலும் இயற்கை சாதனங்களை கையாள்கிறார். மனுஷனுடைய கோபத்தை அவருடைய மகிமைக்கு பயன்படுத்துகிறார், மிஞ்சும் கோபத்தை அவர் அடக்குகிறார் (சங்கீதம் 76:7-10).

தேவன் மனிதர்களை, அவர்களுக்கு என்ன தெரிந்திருக்கிறதோ ( எது குறித்து

அறிந்திருக்கிறார்களோ ) அதற்கு மட்டும் பொறுப்பாளிகளாக்காமல், மனதிருந்தால் அவர்களால் தெரிந்து கொள்ளமுடிகிற (ஆனால் அறிந்து கொள்ள விரும்பாத) விஷயங்களுக்கும் பொறுப்பாளிகளாகவே கருதுகிறார்.

போதனையாகும்படி திட்டம் பண்ணப்பட்ட அவர்களது மற்றும் வரலாற்று அனுபவங்களின் பாடங்களுக்கு தங்கள் இருதயத்தை உட்படுத்தி செவி சாய்க்காமல் உளமாக புறக்கணித்தால் அல்லது அதின் நல்லொழுக்க போதனைகளை வெறுத்து ஒதுக்கிவிட்டால் அதனால் அவர்கள் மேல் வரும் விளைவுகளை அனுபவிப்பது தவிர்க்கமுடியாதது..

இக்கால நாகரிகத்தின் பெரும்பான்மையான இன்பங்களும் வசதிகளும் பெருவாரியாக முற்கால தலைமுறையினரின் அனுபவங்களில் குறித்து கொண்ட பாடங்களை பயன்படுத்தியதின் மூலமாகத்தான் நமக்கு வந்திருக்கின்றன. அச்சுக்கலை இப்பாடங்களை எல்லா மனிதரின் எட்டுந்தொலைவில் கொண்டு வந்துள்ளது. இக்கால தலைமுறையினர் இக்கருத்தில் மட்டும் எல்லா வழிகளிலும் மிகுந்த அனுகூலம் பெறுகிறார்கள். முந்தைய ஞானமும் மற்றும் அனுபவங்களும் திரட்டப்பட்டு ஒன்றாக இத்தலைமுறையினருக்கு கூட்டப்பட்டுள்ளது. ஆனால் சன்மார்க்க பாடங்களை கற்க வேண்டியதும் படிக்க வேண்டியதும் கட்டாயமாக இருந்தாலும், அவைகள் உறுதியாக பொதுமக்கள் கவனத்திற்கு புகுத்தப்பட்டாலும், அவைகள் பொதுவாக புறக்கணிக்கவேப்படுகிறது.

நீதியின்பால் ஈர்ப்பு உள்ள சிந்திக்கும் மனதுக்கு இத்தகைய பாடங்கள், வரலாறு முழுவதும் நிறைந்திருக்கிறது. இந்நாட்களின் மனிதர்களுக்கு, முந்தைய தலைமுறையினரைவிட இத்தகைய பாடங்கள் நிறைய கிடைத்திருக்கிறது. மற்றும் இத்தலைமுறையினர் அதனை அலட்சியப்படுத்துவதால் துன்பம் அனுபவிப்பது அவசியம் (ஏசாயா 63:3-6, நாகூம் 1:2, ரோமர் 1:18, எபேசியர் 5:6, யாக்கோபு 5:1-8).

**வரவிருக்கிற சமாதானத்தின் ஆளுகைக்கு வழி உண்டாக்கும் விதமாக, உலகின் மத மற்றும் சமூதாய அமைப்புகள் உருகி வெந்து கொண்டிருக்கிறது, பூமியும் அதினுள்ள கிரியைகளும் எரிந்து அழிக்கப்பட்டு கொண்டிருக்கிறது (2 பேதுரு 3:10-13).**

கர்த்தர் தன் சினமாகிய உக்கிர கோபத்தை சொரியும்படி ஜாதிகளை சேர்த்திருக்கிறார், இராஜ்ஜியங்களை கூட்டியிருக்கிறார். பூமியெல்லாம் அவருடைய எரிச்சலின் அக்கினியால் அழிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. அவர் விரைவில், ஜனங்கள் எல்லோரும் ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவார் (செப்பனியா 3:8,9).

பூமியின் மேலுள்ள ஜனங்களுக்கு தத்தளிப்பு, இடுக்கண் உண்டாகும், மனுஷர் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் அவர்களுடைய இருதயம் சோர்ந்துபோம் எனவும் மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடு மேகங்களின் (துன்பங்களின்) மத்தியில் வெளிப்படுவதையும் மேற்கோள்காட்டிய பின்னர், “இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்” என்று நமது ஆண்டவர் அறிவுறுத்துகிறார் (லூக்கா 21:28-31).

பூமியில் வரவிருக்கும் கிறிஸ்துவின் ஆளுகைக்கு வழி உண்டாக்க, சாத்தானின் இராஜ்ஜியம் இப்பொழுது கவிழ்க்கப்பட்டு பொடிபொடியாகுவதை பார்க்கும்பொழுது நாம் சந்தோஷப்படுகிறோம். பின்பு **இதே பூமியில் தேவனுடைய நீதியான நித்திய ஆளுகை ஆரம்பிக்கப்படும்.**

பூரணமானவர்கள் தவிர ஒருவரும் நித்தியமாக ஜீவிப்பதில்லை என்ற தீர்ப்பு அனைவரின் நன்மைக்கு ஞானமிக்கதும், நீதி நிறைந்ததுமான ஏற்பாடாகும்.

✡✡✡✡✡✡✡